**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திரு. P.சிவஞானம், எம்,ஏ., எம்.எல்,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை

# <u>I.D.No. 57/2020</u>

## CNR No.TNKP 18-000068-2020

செயலாளர்,
G.K.N.டிரைவ்லைன் ஓர்க்கர்ஸ் யூனியன்,
எண்.77A, A.J.C.காம்ப்ளக்ஸ்,
பாண்டியன் மருத்துவமனை அருகில்,
பெங்களூர் நெடுஞ்சாலை,
திருப்பெரும்புதூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம் 602 105. . . . மனுதாரர்/தொழிலாளர்

/எதிராக/

நிர்வாகம்,
G.K.N.டிரைவ்லைன் இந்தியா லிமிடெட்,
பிளாட் எண்.B-13, சிப்காட் தொழிற்பூங்கா வேப்பூர் A &B,
ஒரகடம், திருப்பெரும்பதூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம் 602 105. . . . எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 26.08.2022 அன்று இறுதிவிசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.J. பிரதாபன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் கோரிக்கை மனு தாக்கல் செய்யாததாலும், அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சார்வு செய்யப்பட்ட நிலையில் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் தொழிலாளர் துணை ஆணையரிடமிருந்து பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் இன்று நீதிமன்றம் வழங்கும்,

**தீர்வம்**

1. மனுதாரர் தொழிற்சங்கம் தொழிலாளர் உதவி ஆணையரிடம் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 33(A)ன் கீழ் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது. 10.11.2017 தேதியில் அந்த புகார் மனுவில் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களை பழி வாங்கும் நோக்கத்தில் நிர்வாகிகள் கேசவன், டில்லிராஜ் மற்றும் பிரபு ஆகியோர்களை புனேவில் உள்ள எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டது பழி வாங்கும் நடவடிக்கை என்பதால் இந்த இடமாறுதல் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதற்கு நிர்வாகத்தரப்பில் 16.09.2019 தேதியில் பதில் மனு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் இந்த கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள 3 தொழிலாளர்களும் மேற்பார்வையாளராக பதவி வகித்தவர்கள் என்பதாலும் அவர்கள் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2(s)ன் கீழ் தொழிலாளர் என்ற வரையறைக்குள் வரவில்லை என்றும் மேலும் மேற்படி நபர்கள் ஒரு யூனிட்டிலிருந்து இன்னொரு யூனிட்டிற்கு மாற்றம் செய்வதற்கு நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதால் தொழிற்சங்கத்தின் கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னிட்டு தொழிலாளர் துணை ஆணையர் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். 13.02.2020 அன்று சமரச பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அன்றைய தினம் இருதரப்பிலும் ஆஜராகி நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்பட வாய்ப்பு இல்லாததால் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(4)ன் கீழ் சமரச முறிவு பதியப்பட்டு அறிவிக்கையானது 27.02.2020 தேதியில் அனுப்பப்பட்டுள்ளது. அதே போல் அரசு முதன்மை செயலாளருக்கு அறிக்கையினை தொழிலாளர் துணை ஆணையர் அனுப்பியுள்ளார். இந்த பிரச்சனை தொழிற்தகராறு என்ற நிலையில் இருப்பதால் இந்த கோரிக்கையினை தீர்வு காண்பதற்காக நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளார். இந்த பரிந்துரையின் பேரில் 24.09.2020 தேதியிட்ட அரசாணை எண்.456-ன்படி அறிக்கை தமிழ்நாடு அரசு இதழில் வெளியிடப்பட்டு அந்த அறிவிக்கை இந்த நீதிமன்றத்திற்கு தீர்வு

காண்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிக்கையின்படி கீழ்கண்ட எழுவினாவிற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. <u>எழுவினா</u>

**''G.K.N.டிரைவ்லைன் இந்தியா லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கு எதிராக மனுதாரர் தொழிற்சங்கம் எழுப்பிய தொழிற்தாவாக்கள் நிலுவையில் இருந்த நிலையில் தாவா தொடர்புடைய டீம் லீடர்கள் திரு.A.டில்லிராஜ் மற்றும் திரு.R.கேசவன் ஆகியோரை ஒரகடம் பணியிடத்திலிருந்து புனேவிற்கு பணி மாறுதல் செய்த நிர்வாகத்தின் செயல் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 33க்கு முரணான செயல் என்றால் உரிய உத்தரவு பிறப்பிக்க"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இந்த அரசாணை அறிவிக்கையின் பேரில் இந்த நீதிமன்றத்தில் தொழிற்தகராறு வழக்கினை கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தொழிற்சங்கத்திற்கும் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மனுதாரர் தொழிற்சங்கம் அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜராகி வந்த நிலையில் தொடர்ந்து தொழிற்சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனு தாக்கல் செய்ய காலஅவகாசம் வழங்கியும் உரிய காலத்திற்குள் கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவில்லை. அதே போல் எதிர்மனுதாரர் நிர்வாகத்தரப்பிற்கு அழைப்பானை சார்வு செய்யப்பட்டும் அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. மனுதாரர் தொழிற்சங்கம் கோரிக்கை மனுவை தாக்கல் செய்த காரணத்தினாலும் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டார். வழக்கின் இருதரப்பிலும் கோரிக்கை மனு, பதில் மனு தாக்கல் செய்யப்படாத நிலையில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள காரணத்தினால் தொழிலாளர் துணை

ஆணையர் முன்பு உள்ள வழக்கு கோப்புகள் வரவழைக்கப்பட்டது. இந்த கோப்புகளை பரிசீலிக்கையில் 10.11.2017 தேதியில் G.K.N.டிரைவ்லைன் இந்தியா லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கு எதிராக மனுதாரர் தொழிற்சங்கம் தொழிலாளர் உதவி ஆணையரிடம் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 33(A)ன் கீழ் புகார் மனு அளித்துள்ளது. அந்த புகார் மனுவில் தொழிற்சங்க உறுப்பினர்களான நிர்வாகிகளை நிர்வாகம் பழி வாங்கும் நோக்கத்தில் பணி மாறுதல் செய்துள்ளதை ரத்து செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதற்கு 02.11.2018 தேதியில் எதிர்மனுதாரர் நிர்வாகம் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த பதில் மனுவில் தொழிற்சங்கம் குறிப்பிடும் தொழிலாளர்கள் இருவருமே மேற்பார்வையாளராக பதவி வகிக்கும் டீம் லீடர்கள் என்றும் இவர்கள் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2(s)-ல் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் என்ற வரையறைக்குள் வரமாட்டார்கள் என்றும் அதனால் தொழிற்தகராறு எழுப்ப முடியாது என்றும் மேலும் டீம் லீடர்களும் நிர்வாக காரணங்களுக்காக பணி மாறுதல் செய்வதற்கு நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சமரச பேச்சுவார்த்தைக்காக தொழிலாளர் உதவி ஆணையர் இருதரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு 13.02.2020 தேதியில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அந்த பேச்சுவார்த்தையில் இருதரப்பிலும் தத்தம் நிலையையே வலியுறுத்தியதால் சமரசம் ஏற்படாததை குறிப்பிட்டு தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(4)ன் கீழ் சமரச முறிவு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில் தொழற்தகராறு ஏற்பட்டுள்ளதால் நீதிமன்ற பரிசீலனைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரர் தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ள தொழிற்தகராறு மனுவில் தொழிற்சங்கத்தின் நிர்வாகிகள் கேசவன், டில்லி ராஜ் ஆகியோர்கள் இருவரையும் பழி வாங்கும் நோக்கத்துடன் புனேவிற்கு பணி மாறுதல் செய்ததாக கூறும் நிலையில் இந்த சங்கதியை நிரூபிக்க தொழிற்சங்கம் இந்த வழக்கில் கோரிக்கை மனுவினை தாக்கல் செய்ய முன் வரவில்லை. நிர்வாகத்தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் மேற்சொன்ன

கேசவன், டில்லி ராஜ் ஆகியோர்கள் இருவரும் மேற்பார்வையாளர் என்ற நிலையில் உள்ள டீம் லீடர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்பார்வை நிலையிலுள்ள காரணத்தினால் தொழிலாளர் என்ற வரையறைக்குள் வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு அறிவிக்கையில் கூட டீம் லீடர்கள் கேசவன், டில்லிராஜ் ஆகியோர்கள் பணி மாறுதல் செய்யப்பட்டதாக தான் கூறப்பட்டுள்ளது. நிர்வாகத்தரப்பில் கூறப்பட்டுள்ளது போல் மேற்பார்வையாளர் நிலையிலுள்ள டீம் லீடர் பணி மாறுதல் செய்த நிலையில் அவர்கள் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2(s)-ல் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் என்ற வரையறைக்குள் வரவில்லை என்று கூறும் நிலையில் தொழிற்தகராறு வழக்கினை எழுப்ப முடியாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதால் இந்த சங்கதியை மறுக்கும் வகையில் தொழிற்சங்கத்தால் கோரிக்கை மனு தாக்கல் செய்யப்படவில்லை.

6. மேலும் டீம் லீடராக உள்ள மேற்பார்வையாளர்களை நிர்வாக காரணங்களுக்காக ஒரு யூனிட்டிலிருந்து இன்னொரு யூனிட்டிற்கு பணி மாறுதல் செய்வதற்கு நிர்வாகத்தரப்பிற்கு அதிகாரம் உள்ளதாக கூறும் நிலையில் அந்த சங்கதியை ஆட்சேபிக்கும் வகையில் தொழிற்சங்கம் இந்த வழக்கில் ஆஜராகி கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவில்லை.

7. எனவே இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எழுவினாவில் கண்டுள்ளவாறு தொழிற்சங்கத்தின் நிர்வாகிகளான கேசவன், டில்லிராஜ் ஆகியோர்கள் டீம் லீடர்களாக இருப்பதாக கூறுவதினாலும் அவர்கள் மேற்பார்வையாளர் நிலையிலுள்ள அவர்களை பணி மாறுதல் செய்வதற்கு நிர்வாகத்திற்கு அதிகாரம் இருப்பதாக கூறுவதை ஆட்சேபனை செய்யும் வகையில் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நிரூபிக்கும் வகையில் இந்த வழக்கில் கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவில்லை என்பதாலும் மேலும் இருதரப்பினருமே ஆஜராகவில்லை என்பதாலும் இந்த தொழிற்சங்கத்தால் கோரியுள்ள கோரிக்கை குறித்து இந்த வழக்கில் நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகிறது.

8. எனவே 24.09.2020 தேதியிட்ட அரசாணை எண்.456 ல் குறிப்பிட்டுள்ள எழுவினாவில் கண்டுள்ள தொழிற்சங்கத்தின் கோரிக்கையான டீம் லீடர்கள்

திரு.A.டில்லிராஜ் மற்றும் திரு.R.கேசவன் ஆகியோரை ஒரகடம் பணியிடத்திலிருந்து புனேவிற்கு பணி மாறுதல் செய்த நிர்வாகத்தின் செயல் தொழிற்தகராறுகள் சட்டப்பிரிவு 33க்கு முரணான செயல் என்பது குறித்து மனுதாரர் தொழிற்சங்கத்தால் நிரூபிக்கப்படவில்லை என்பதால் இந்த தொழிற்தகராறு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

முடிவாக இந்த தொழிற்தகராறு வழக்கில் கோரியுள்ள தொழிற்சங்கத்தின் கோரிக்கை குறித்து நிரூபிக்கப்படாத நிலையில் இந்த தொழிற்தகராறு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2022ம் ஆண்டு செப்டம்பர் 16ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

**<u>இரு தரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் :-</u>** இல்லை.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM

Presiding Officer, Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2022.12.07 11:39:26 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.